1972 ஆகஸ்ட் 9]

அரிசன மாணவர் விடுதிகள்

*6 வினா—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் நகரில் அரிசன நல இலாகாவால் நடத்தப்பட்டு வரும் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது. ஆனால், தற்பொழுதுள்ள நிதிநிலை காரணமாக அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, இருபத்தைந்து ஆண்டுகளாக அந்த மாணவர்கள் விடுதி பெரம்பலூரிலே நடைபெற்று வருகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதற்காகக் கட்டடங்கள் கட்டவேண்டுமென்று அந்த இடத்தை அதற்காகக் கையகப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த்துறை வாரியத்தின் மூலமாகத் தலைமைச் செயலகத்திற்குத் தபால் அனுப்பி இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மேலும் அதைப் பரிசீலனை செய்து 8,33,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே கட்டடம் கட்டப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதற்குப் போதுமான அளவில் நிதிநிலைமை இடம் தராத காரணத்தினாலே எடுத்துக்கொள்ள முடியவில்லை.

*7 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை அரிசன மாணவர்கள் மிகுந்துள்ள கும்மிடிப்பூண்டியிலும், பெரியபாளையத்திலும் அரிசன மாணவர் விடுதிகள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்மிடிப்பூண்டியில் தாழ்த்தப்பட்டோருக்கான ஒரு அரசினர் மாணவர் இல்லம் 30 அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் ஏற்கெனவே இயங்கி வருகிறது. பெரியபாளையத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.